திரு. எம். ஏ. லத்தீப் : தலைவர் அவர்களே, ஒரு ஊரிலே அந்த அலுவலகத்தைத் தவிர வேறு வசதி கிடையாது. அப்படி இருக்கிறபோது, எல்லா வசதிகளையும் உடைய ஒரு இடத்தில் இன்னொரு வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு இருக்கிறது. அதற்கு என்ன காரணம் என்பதை அமைச்சர் அவர்கள் விளக்கு வார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, திருப்பத்தூர் பகுதியில் இருக்கின்ற மக்களுக்கு நிரம்ப வசதிகள் இருக்கிற காரணத்தால், அதைப் பயன்படுத்திக் கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்ற காரணத்தால் அது திருப்பத்தூருக்கு மாற்றப்பட்டு இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், குடியாத்தம் தாலுக்கா, வாணியம்பாடி தாலுக்கா, திருப்பத்தூர் தாலுக்கா ஆகிய இந்த மூன்று தாலுக்காக்களிலும் இருக்கக்கூடிய கூட்டு றவுச் சங்கங்களில் ஒட்டு மொத்தமாகப் பார்த்தால், குடியாத் தத்தில் மட்டும் இரண்டு மடங்கு அதிகம் இருக்கிறது. ஆகவே, அப்படிப் பார்க்கிறபோதும் கூட்டுறவுச் சங்கங்களைக் கணக்கில் கொண்டு பார்த்தாலும், கருவூலம் இருக்கிற இடத்தில் அதை மாற்ற வேண்டும் என்று கருதினாலும், அதற்குக் குடியாத்தம் சிறந்த இடமாக இருக்கும். ஆகவே, குடியாத்தத்திற்கு அந்த அலுவலகத்தை மாற்ற அரசு ஏற்பாடு செய்யுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : தலைவர் அவர் களே, ஏற்கனவே அது மாற்றப்பட்டாகி விட்டது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கி றேன்.

லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டி, உடன்குடி.

*வினா எண். 4—திரு. இரா. அமிர்தராஜ் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை அளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் தாலுக்கா உடன்குடி பேரூராட்சி மன்ற எல்லைக்குள் லேபர் காண்ட்ராக்ட் சொசைட்டிக்கு இதுவரை ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

(ஆ) எந்த வேலைகளுக் கெல்லாம் அந்தத் தொகை பயன் படுத்தப்பட்டது ?

(இ) ஊழல் ஏதும் நடந்துள்ளதா ? அப்படியென்றால் நடவடிக்கையின் பேரில் யாருக்கெல்லாம் நோட்டீஸ் அனுப்பப் பட்டுள்ளது?

1979 அக்டோபர் 27]

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :— (அ) ரூபாய் 13,250.

(ஆ) (i) ஒரு அங்கத்தினருக்கு ரூபாய் 25 வீதம் 100 அங்கத்தினர்கள் கொண்ட சங்கத்திற்கு பங்குத் தொகை மூலதனம் செய்வதற்காக ரூபாய் 2,500 கொடுக்கப்பட்டது.

(ii) நடைமுறை மூலதனமாகக் கொடுக்கப்பட்ட ரூபாய் 7,500-ஐ சங்க வியாபாரத்திற்குப் பயன்படுத்தப்பட்டது.

(iii) கடன் பெறும் பொருட்டு திருநெல்வேலி மத்திய கூட்டுறவு வங்கியில் ரூபாய் 2,500-ஐ காப்பு நிதியாக போடப் பட்டுள்ளது.

(iv) உபகரணங்களை வாங்குவதற்காக அங்கத்தினர் களுக்கு ரூபாய் 750 வழங்கப்பட்டது.

(இ) அரசால் சங்கத்திற்கு வழங்கப்பட்ட நிதியை உப யோகம் செய்ததில் எந்தவித ஒழுங்கீனங்களும் நடைபெறவில்லை.

(முற்பகல் 9.10)

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, உபகரணங் கள் வழங்கப்பட்டதாக மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார் கள். ஆனால், அந்த உபகரணங்கள் யாருக்கும் வழங்கப்படவில்லை என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். அதன் விபரம் அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, அதன் காரணமாகத்தான் அந்தக் கூட்டுறவுச் சங்கம் கலைக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுப்பினர் அவர் களுக்கு நினைவுபடுத்துகிறேன்.

திரு. இரா. அமிர்தராஜ் : தலைவரவர்களே, மீண்டும் அந்த சொசைட்டியை செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு தலை வரவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தவரையில் அந்தப் பிரச்சினை எழவில்லை. வேறு சங்கம் அமைக்கப்படுவ தாக இருந்தால் அதுபற்றி அரசு பரிசீலனை செய்யும்.